# BSNL சங்கங்களின்கூட்டமைப்பு

**BSNL ஊழியர்சங்கம்-சஞ்சார்நிகாம்TTAஅமைப்பு-BSNLமஸ்தூர்சங்**

எண் : UF/124 தேதி : 7.4.2016.

பெறுநர்

திரு. ஏ. எம். குப்தா,
பொதுமேலாளர் (SR),BSNL கார்ப்பரேட்அலுவலகம்,
பாரத்சஞ்சார்பவன், ஜன்பத், புதுதில்லி - 110001.

ஐயா,

பொருள் : போராட்டஅறிவிப்பு - குறித்து.
பார்வை. : எண் :BSNL/7-2//2016 தேதி 6.4.2016.

மேற்காணும் பார்வையில் குறிப்பிட்ட SR பிரிவுஎண்ணுள்ள கடிதத்தின்படி, பின்வருவனவற்றை தங்களது பரிவான கவனத்துக்குக் கொண்டு வரவிரும்புகிறேன். 7- வது உறுப்பினர் சரிபார்ப்பு தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வரும் சூழ்நிலையில், முதன்மை அங்கீகார பிரதிநிதித்துவ சங்கமான BSNLஊழியர்சங்கம், தொழிலமைதி குலைவதற்கான நிலைமையை உருவாக்கியது போன்ற ஒரு சித்திரத்தை உருவாக்குகின்ற வகையில் மேற்காணும் கடிதம் உள்ளது என்பது, மிகவும் துரதிருஷ்டமானது. இது முற்றிலும் உண்மைகளுக்கு புறம்பானதாகும். தற்போது சுமுகமற்ற சூழல் உருவாக்கப்பட்டது வேறுயாராலுமல்ல ; நிர்வாகத்தால் தான் என்பது தான் உண்மை.

முறையான அவகாசத்துடன் தகவல் அளிக்காமல், PLI -க்கான கூட்டுக்குழுவின் கூட்டத்தைக் கூட்டுவதற்கான நிர்வாகத்தின் முடிவிலிருந்து தான் இந்த முழுப்பிரச்னையும் துவங்கியது. ஒரே ஒருநாள் முன்பாக தகவலளித்துத்தான் இக்கூட்டம் கூட்டப்பட்டது என்பதே உண்மை. இது போன்ற நிகழ்ச்சிகள் இதற்கு முன்பு நடந்ததேயில்லை. BSNL ஊழியர்சங்கத்தின் பொதுச்செயலாளர் கூட்டத்தில் கலந்துகொள்ள முடியாத தனது நிலையைத் தெரிவித்த பின்னரும், 30.3.2016 அன்று, நிர்வாகத்தால் கூட்டம் நடத்தப்பட்டுள்ளது. அவசர அவசரமாக கூட்டுக்குழுவின் கூட்டத்தை நடத்துவதற்காக, நிர்வாகம், BSNL ஊழியர்சங்கம் தெரிவித்த எதிர்ப்பையும் ஒதுக்கி வைத்துவிட்டது. நிர்வாகத்தின்இந்தநடவடிக்கை, அநீதியானதும் ஒழுங்கு விதிகளை மீறுவதுமாகும்.

ஒரே ஒருநாள் முன்பாக தகவலை அளித்து PLI குழுகூட்டம் அவசரமாக ஏன் நடத்தப்பட்டது என்பது குறித்து ஒட்டு மொத்த ஊழியர்களுக்கும் BSNL நிர்வாகம் பதிலளிக்கக் கடமைப்பட்டுள்ளது. மிகமிகக் குறுகிய இந்த காலஅவகாசத்தில், குழுவின் கூட்டத்தை நடத்தியதன் மூலம், BSNL நிர்வாகம், யாரை மகிழ்விக்கவிரும்பியது? மேலும், பிரதான அங்கீகார பிரதிநிதிசங்கத்தின் பொதுச்செயலாளர் இந்தஅவசர (?) கூட்டத்தில் கலந்துகொள்ள இயலாத தனது நிலைமையைத் தெரிவித்தபிறகும், நிர்வாகம் ஏன் கூட்டத்தை நடத்த முன்வந்தது என்பதைவிளக்கவேண்டும். BSNL நிறுவனம், ஒருதனியார்நிறுவனமல்ல, அது இந்திய அரசின்கீழ் செயல்படும் ஒரு நிறுவனம் என்பதை நிர்வாகத்துக்கு நாங்கள் நினைவூட்ட விரும்புகிறோம். எனவே, அதற்கானவிதிமுறைகளும், வடிவங்களும் கடைப்பிடிக்கப்படவேண்டும்.

30.3.2016 அன்று நடைபெற்ற கூட்டத்தில் BSNL ஊழியர்சங்கம் கலந்து கொள்ளாமல் இருந்தும், நிர்வாகம் அளிக்க முன் வந்த PLI தொகையைக் குறித்து BSNL ஊழியர்சங்கம் எவ்வாறு அறிந்து கொள்ள முடிந்தது என்று மேற்கண்ட கடிதத்தில் கேட்கப்பட்டுள்ளது. PLI - ஆக ஓர் இரண்டு இலக்கதொகையை அளிக்க விரும்புவதாக CMD BSNL அவர்கள், BSNL ஊழியர்சங்கத்திடம் பலமுறை தெரிவித்துள்ளார் என்பதைக் குறிப்பிடவிரும்புகிறோம். BSNL ஊழியர்சங்கம் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை.அதுமட்டுமல்ல, 29.3.2016 அன்று, BSNL ஊழியர்சங்கத்தின் பிரதிநிதிகள், CMDBSNL – அவர்களைச்சந்தித்த போது கூட, ஒருபவுண்டுக்கு இணையான தொகையை PLI - ஆக அளிக்க விரும்புவதாக அவர் தெரிவித்தார். BSNL ஊழியர் சங்கம் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனாலும், முதன்மை அங்கீகாரச் சங்கத்தைப்பு றக்கணித்துவிட்டு, NFTE சங்கம் அந்தத் தொகையை ஏற்றுக் கொண்டதால், நிர்வாகம் அவசரஅவசரமாக குழுவின் கூட்டத்தைக்கூட்டியது துரதிருஷ்டவசமானது. எனவே, அவசரகதியில் இந்தக் கூட்டத்தை நடத்திய முறையானது, CMD BSNL - அவர்களின் ஒப்புதல் முத்திரையைப் பெற்றுள்ளது என்று நாங்கள் உறுதியாக நினைக்கிறோம்.

எங்களது கடிதத்தில், CMD BSNL -அவர்களுக்கும், NFTE சங்கத்துக்கும் ஒரு ரகசிய உடன்படிக்கை ஏற்பட்டுள்ளது என்று நாங்கள் குறிப்பிட்டிருந்தோம். எங்களது கடிதத்தில் எழுதப்பட்டுள்ள ஒவ்வொருவார்த்தையிலும் நாங்கள் உறுதியாக உள்ளோம். 'ரகசியஉடன்படிக்கை' என்ற சொற்றொடர் அவை மரபை மீறிய சொற்றொடரல்ல.BSNL ஊழியர்கள் மீது ஓர் அற்பத்தொகையை

திணிப்பதற்காக ஒரு புரிதலை CMD BSNL - அவர்களும், NFTE சங்கமும் ஏற்படுத்திக்கொண்டதன் பிறகே 30.3.2016 அன்று.PLI - குழுவின்கூட்டம் நடைபெற்றுள்ளது என்பதை நாங்கள் இப்போதும் வலியுறுத்துகிறோம். ஊழியர்களின் முதன்மை அங்கீகாரச்சங்கம் என்றமுறையில், இதற்கு எங்கள் எதிர்ப்பினைத் தெரிவிப்பதற்கும், கூடவே, ஊழியர்களுக்கு நியாயமான. PLI வழங்க வேண்டும் என கோருவதற்கும் எங்களுக்கு அனைத்து நியாயங்களும் உள்ளன.

BSNL ஊழியர்சங்கம் ஒரு பொறுப்புள்ள தொழிற்சங்கமாகும். கடந்த காலத்தில் நடந்ததைப் போலவே, 7- வது உறுப்பினர் சரிபார்ப்பு தேர்தலை சுமுகமாக நடத்துவதற்கு எங்களது சங்கம் முழுமையான ஒத்துழைப்பை அளிக்கும்.

நன்றியுடன்,

தங்கள் உண்மையுள்ள,

பி. அபிமன்யு

அமைப்பாளர்.